Registered as a Newspaper



# உதயன்

சுடர் : 41 கதிர் : 122 | சனிக்கிழமை 28 மார்ச் 2026 | பங்குனி 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057 | பக்கங்கள் –12 விலை – ரூபா 50

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமித்த

# காணிகளை விடுவிக்க நடவடிக்கைகள் துரிதம்!

80 வீதமான பணிகள் நிறைவு; அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 28**

**தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்து மக்களிடம் ஒப்படைக்கும் பணிகளில் 80 வீதமானவை நிறைவடைந்துள்ளன. விரைவில் ஏனைய நடவடிக்கைகள் முழுமையடையும் - இவ்வாறு அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.**

»11

செம்மணிப் புதைகுழி

## அகழ்வுத் திகதி தொடர்பில் ஏப். 7ஆம் திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

செம்மணி மனிதப்புதைகுழியில் அடுத்தகட்ட அகழ்வுப் பணிகளை ஆரம்பிப்பதற்கான திகதிகள் தொடர்பில், ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

»11



கிளிநொச்சி - முரசுமோட்டையில்

## மஞ்சள் செய்கை பெரு வெற்றி!

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி - முரசுமோட்டைப் பகுதியில் பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட மஞ்சள் செய்கை வெற்றியளித்துள்ளது. முரசுமோட்டை, ஊரியான் பகுதியில் இ. இராசரத்தினம் என்ற விவசாயியின்

»11

வயாவிளான்

## இராணுவ மருத்துவமனை; கட்டுமானத்தை நிறுத்துக

யாழ். ஒருங்கிணைப்புக் குழுவில் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் - வயாவிளான் பகுதியிலுள்ள தனியார் காணிக்குள் அமைக்கப்படும் இராணுவ மருத்துவ மனைக் கட்டுமானங்களை உடனடியாக இடைநிறுத்து

»11

## பலாலி கிழக்கு விரைவில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

பலாலி கிழக்குப் பகுதி முழுவதையும் படிப்படியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார். அவர் மேலும்

»11

## தென். பிரதேச செயலகத்தை இரண்டு பிரிவுகளாக்க முடிவு!

யாழ்ப்பாணம், மார்ச் 28

தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டு பிரிவுகளாக மாற்றுவது என்று, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்ட

»11

போராட்டங்கள் காரணமாக

## யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று உச்சக்கட்ட பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, உச்சக்கட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது, ஆசிரியர்

»11



## 51 கிலோ கஞ்சா ஜெயபுரத்தில் மீட்பு

ஒருவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி - ஜெயபுரம் பகுதியில் 51 கிலோ கஞ்சாப் பொதிகள் நேற்றுக் கைப்பற்றப்பட்

»11



“இப்பிடி வீதங்களைச் சொல்லுகினமே தவிர விடுவிக்கினமில்லையே!”

பூச்சந்தி பூரான்

## வீதியில் உறங்கியவர் மீது ஏறியது மோட்டார்சைக்கிள்

சம்பவ இடத்திலேயே பலி

பருத்தித்துறையில் சோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

போதையில் வீதியில் உறங்கியவர் மோட்டார்சைக்கிள் ஏறியதில் பரிதாபமாக உயிரிழந்தார். பருத்தித்துறை - கட்டப்பிராய் பகுதியில் நேற்று

»11



இந்தியாவிலிருந்து

## எரிபொருள் கப்பல் வருகின்றது இன்று

கொழும்பு, மார்ச் 28

இந்தியாவிலிருந்து எரிபொருள் கப்பலொன்று இன்று இலங்கைக்கு வரவுள்ளது என கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்

»11

அத்துமீறிய மீன்பிடி

## 10 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

மன்னார், மார்ச் 28

அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களுக்கு 12

»11

## கத்தி வெட்டில் இளைஞர் காயம்

குருநகரில் கொடூரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற கத்திவெட்டுத் தாக்குதலில்

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4388 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 15 35 47 55 |
| விசேட எழுத்து | O |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1455 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 34 37 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0414 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 8 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2494 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 04 29 61 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6146 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 9 8 3 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2176 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 23 45 55 66 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 27.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0262 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 20 66 |

## ஐ.எம்.எப். நிபந்தனைகள்

# மத்திய கிழக்கு போர்ச்சூழலால் இலங்கைக்குப் புதிய சவால்கள்!

**கொழும்பு, மார்ச் 28**

**மத்திய கிழக்கில் தீவிரமடைந்துவரும் மோதல்கள் மற்றும் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் காரணமாக, சர்வதேச நாணயநிதியம் விதிக்கும் பொருளாதார மறுசீரமைப்பு நிபந்தனைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படக்கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணயநிதியத்தின் அதிகாரிகள் குழுவினர் 5ஆம் மற்றும் 6ஆம் கட்ட மீளாய்வுகளை முன்னெடுப்பதற்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாட்டை வந்தடைந்தனர். இந்தக் குழுவினர் எதிர்வரும் ஏப்ரல் 9ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து திறைசேரி மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளுடன் பரந்துபட்ட சந்திப்புகளை முன்னெடுக்கவுள்ளனர். 5ஆம் மற்றும் 6ஆம் கட்ட மீளாய்வுகளை ஒன்றிணைத்து மேற்கொள்வது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

இதன்போது மத்திய கிழக்கு போர்ச்சூழலால் ஏற்பட்டுள்ள வெளியக அழுத்தங்கள் இலங்கைப் பொருளாதாரத்தில் செலுத்தும் தாக்கம் மற்றும் 2025 நவம்பரில் ஏற்பட்ட 'டித்வா' சூறாவளி ஏற்படுத்திய அழிவுகள். இதற்காக ஏற்கனவே 200 மில்லியன் டொலர் அவசர நிதியுதவியை இலங்கை கோரியுள்ளமை ஆகிய காரணிகளால் நிபந்தனைகளில் நெகிழ்வுத்தன்மை அல்லது மாற்றங்கள் கோரப்படலாம். மோதல்கள் இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானம் மற்றும் வலுசக்திப் பாதுகாப்பில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் குறித்து ஐ.எம்.எப். குழுவினர் விசேட கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## இந்திய மீனவர்கள் 7 பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம்9ஆம்திகதிவரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நெடுந்தீவு வடக்குக் கடற்பரப்பில் இரு வேறு சந்தர்ப்பங்களில் 7 இந்திய மீனவர்கள் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர். மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட இரு விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைதான மீனவர்கள் யாழ்.மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். இதன்போது ஏழு மீனவர்களையும் அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (க-66)

## ஆட்பதிவுத் திணைக்கள சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 28

ஆட்பதிவுத் திணைக்களத்தின் கணினி அமைப்பில் மீண்டும் ஏற்பட்டுள்ள திடீர் முடக்கம் காரணமாக ஒருநாள் சேவை உள்ளிட்ட அனைத்துப் பொதுச்சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அனைத்து மாகாண அலுவலகங்களின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. கணினி அமைப்பை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் வரை, நேற்று வெள்ளிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை அடையாள அட்டை வழங்கும் சேவைகள் மற்றும் ஏனைய பொதுச் சேவைகள் முன்னெடுக்கப்படமாட்டாது எனத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ள அலுவலகங்களுக்கு வருகை தருவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச-இ)



## ஈரான் தூதுவருடன் மைத்திரி சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 28

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் அலிசெரா டெல்கோஷை கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால [illegible] றும் தற்போதைய பிராந்திய அரசியல் சூழல்கள் குறித்தும் இதன் போது சுமுகமாகப் பேசப்பட்டதாகத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | 0854 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| O | 2 0 4 1 1 6 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3120 | Z | 01 11 12 40 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 09 45 53 55 | 5281 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0950 | 08 33 34 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 15 20 54 | 4832 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 03 | 06 56 60 72 | 2296 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 05 45 53 57 | 2946 |

## இலங்கையின் எரிசக்திச் சவால்களை எதிர்கொள்ள ரஷ்யா துணை நிற்கும்

*ரஷ்யப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 28

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு நெருக்கடியையும் கையாள்வதற்கு எமது நாடு தயார்நிலையில் இருப்பதாக ரஷ்ய வலுசக்திப் பிரதி அமைச்சர் ரோமன் மார்ஷாவின் உறுதியளித்துள்ளார். இலங்கைக்கு வந்த ரஷ்ய உயர்மட்டக் குழுவினர் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். தற்போதைய உலகளாவிய நெருக்கடி இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ள அழுத்தங்களை ரஷ்யா நன்கு புரிந்து வைத்துள்ளது. வலுசக்தித் துறையில் மட்டுமன்றி, தொழில்நுட்பம், இயந்திர உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருளாதாரக் கட்டமைப்பு சார்ந்த எவ்வகையிலான ஒத்துழைப்பையும் வழங்க ரஷ்யா தயாராக உள்ளது.

இந்த விஜயத்தின் மூலம் இலங்கை-ரஷ்யா இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகள் மேலும் ஒரு புதிய கட்டத்தை எட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். சோவியத் ரஷ்யா காலம் முதல் இலங்கை பெற்று வரும் உதவிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நினைவுகூர்ந்தார். சர்வதேச விவகாரங்களில் இலங்கை எதிர்நோக்கும் சவால்களின் போது ரஷ்யா வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு ஜனாதிபதி தனது நன்றியையும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# எரிபொருள் சிக்கனத்தில் அரச நிறுவனங்கள் அவதானம்

## மீறினால் நடவடிக்கை

**கொழும்பு, மார்ச் 28**

**மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழலால் ஏற்படக்கூடிய எரி சக்தி நெருக்கடியைச் சமாளிக்க, அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.**

எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில், ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் மின்சாரம் மற்றும் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த விசேட சுற்றறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. இதனை அனைத்து அரச நிறுவனங்களும் கட்டாயம் பின்பற்றவேண்டும்.

அரச நிறுவனங்கள் இந்த வழிகாட்டல்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன என்பது குறித்து உரிய தரப்பினரிடமிருந்து முன்னேற்ற அறிக்கை கோரப்படும். நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் முறையாகச் செயற்படுத்தப்பட வேண்டும். அதன் முழுப்பொறுப்பும் அந்தந்த அரச நிறுவனங்களுக்கே உண்டு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## விசேட எரிபொருள் முற்றுகை; 3,600 லீற்றர் எரிபொருள் மீட்பு

கொழும்பு, மார்ச் 28

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் சட்டவிரோதமான முறையில் எரிபொருளைச் சேமித்துவைத்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு, புதுக்குடியிருப்பு மற்றும் ஹிங்குராக்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

நீர்கொழும்பு கலப்புப் பகுதியில் மீன்பிடிப் படகொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 1,050 லீற்றர் டீசலை சேமித்து வைத்திருந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் 562 லீற்றர் டீசலுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். மேலும் ஹிங்குராக்கொட பகுதியில் சட்டவிரோதமாகச் சேமிக்கப்பட்டிருந்த 1,995 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டதுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## மறைத்து வைத்திருந்த 3 கிலோ மஞ்சள் மீட்பு

கம்பஹா, மார்ச் 28

கம்பஹா பங்கமெண்டிய பகுதியில் 75 பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2,970 கிலோ 600 கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. துங்கல்பிட்டியப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போதே பதுக்கி வைக்கப்பட்டிருந்த மஞ்சள் மீட்கப்பட் டது. இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)




## QR' குறியீட்டுக்கு 62 இலட்சம் பேர் பதிவு!

கொழும்பு, மார்ச் 28

எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 'கியூ.ஆர்.' குறியீட்டு முறையின்கீழ், மார்ச் 14ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதிக்குள் 62 இலட்சத்துக்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர் என்று டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இந்த மொத்த எண்ணிக்கையில் 27 இலட்சத்துக்கும் அதிகமானோர் மார்ச் 15 முதல் நேற்றுவரையான காலப்பகுதிக்குள் பதிவுசெய்துள்ளனர்.

இன்னும் சுமார் 2 இலட்சம் அளவிலானோருக்கு 'கியூ. ஆர்.' வசதியைப் பெற்றுக்கொள்வதில் சில தொழில்நுட்பச் சிக்கல்கள் நிலவுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## துருக்கி – கொழும்பு இடையே கூடுதல் விமானசேவைகள்!

கொழும்பு, மார்ச் 28

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவும், சர்வதேச விமானப் போக்குவரத்துத் தொடர்புகளை மேம்படுத்தவும் இஸ்தான்புல் மற்றும் கொழும்பு இடையிலான விமானசேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் துருக்கி எயார் லைன்ஸ் தீர்மானித்துள்ளது. இதன்படி வாரத்துக்கு மேலதிகமாக இரண்டு விசேட விமான சேவைகள் இணைக்கப்படவுள்ளன. உயர்மட்ட தூதரகப் பேச்சுகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## ஐவர் கொலை வழக்கு 2 பேருக்கு மரணதண்டனை

மொனராகலை, மார்ச் 28

2002ஆம் ஆண்டு தனமல்வில பகுதியில் இடம்பெற்ற ஐவர் கொலைச் சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு சந்தேகநபர்களுக்கும் மொனராகலை மேல் நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. 2002[illegible] கிதுல்கொட்டைப் [illegible] நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 13 வயது சிறுமி உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இதன்போது சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்ட இருவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு மரண [illegible] (ச-இ)

## ஊருக்குத்தான் உபதேசம்..!

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில இடியப்பச் சிக்கல் மாதிரி இடமாற்றப் பிரச்சினை இழுபட்டபடியே இருக்குது. இடமாற்றம் குடுபட்ட ரீச்சர்மார் எல்லாரும் மூச்சுக்காட்டாமல் உடனடியா அந்தந்த இடங்களுக்குப் போய் டியூட்டியைச் செய்யாட்டி வேலையிலை இருந்தே தூக்குப்படுவினம் எண்டு ஒரு 'மேலதிகமான அதிகாரி' தான் ஒற்றைக்காலில நிக்கிறாராம். உந்த இடமாற்றத்தால பாதிக்கப்பட்ட ரீச்சர்மார் தங்கட பிரச்சினையளை ஆதாரத்தோட விளக்கி அப்பீலுக்குப் போட்டிருக்கினம். அந்த அப்பீலுக்குப் பதில் வரமுன்னரே சுடுகுது மடியைப் பிடி எண்ட கணக்கில உந்த மேலதிகமான அதிகாரி எல்லாரையும் ட்ரான்ஸ்வர் கிடைச்ச இடங்களுக்குத் துரத்திறதிலையே குறியா இருக்கிறார். இப்பிடி ரீச்சர்மாரை வெளிமாவட்டங்களுக்கு கலைக்கிறதில வீரம் காட்டுற உந்த மேலதிகமான அதிகாரியின்ர சாதகத்தை ஒருக்கா எடுத்துப் பார்த்தால் 'பக்கெண்டு' சிரிப்புத்தான் வருகுது.

உந்த மேலதிகமான அதிகாரி 2007 இல கல்விச் சேவையில இணைஞ்சு, இப்ப 2026 வரைக்கும் -கிட்டத்தட்ட 19 வருசமா- இந்தச் சேவையில இருக்கிறார். ஆனால் இதில என்ன சிறப்பான தரமான சம்பவம் எண்டால், இந்த 19 வருசத்தில வெறும் மூண்டரை வருசம் தான், ஆள் மாகாணக் கல்வித் திணைக்களத்தை விட்டு வெளியில (மன்னார், வலிகாமம், யாழ்ப்பாண வலயங்களில) வேலை செய்திருக்கிறார். அப்ப மிச்சப் பதினஞ்சரை வருசமா எங்க இருந்தவர் எண்டு தானே கேக்கிறியள்? வேற எங்க இருப்பார். யாழ்ப்பாணம் நல்லூரில இருக்கிற வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலேயே கத்தரித்தோட்டத்துக்கு கல்லுப்பிள்ளையார் மாதிரி குந்திக் கொண்டு இருக்கிறார்.

உதவிக் கல்விப் பணிப்பாளராத் தொடங்கி, பிரதிப் பணிப்பாளர், மேலதிகப் பணிப்பாளர் எண்டு எல்லாப் பதவிகளையும் ஒரே ஒப்பீசுக்குள்ளயே அனுபவிச்ச பெருமையும் இந்த மேலதிகமான அதிகாரியையே சேரும். வடக்கில ஒரு மாகாணக் கல்வித் திணைக்களத்தில இவ்வளவு காலம் தொடர்ச்சியா வேற ஆரும் வேலை செய்யேலை எண்டு ஊரே கதைக்குது. 'மாகாணத்துக்கு வெளியில போகமாட்டன்' எண்டு 15 வருசமா ஒரே இடத்தில ஒட்டிக்கொண்டு இருக்கிறவர், 'ட்ரான்ஸ்பர் குடுத்தால் அந்தந்த இடத்துக்குப் போகவேண்டியதுதானே. எங்கையும் வேலை செய்வம் எண்டுதானே இந்த வேலைக்கு வந்தனியள். இப்ப வீட்டோடதான் வேலை வேணுமெண்டா நாங்கள் என்ன செய்யிறது' எண்டு ஊருக்கு உபதேசம் செய்யிறார். 'அப்பிடிச் சொல்லுறவர் அதுக்குமுதல், தான் ஒருக்கா வெளிமாவட்டத்துக்குப் போய் வேலையைப் பார்த்தால் என்ன?' எண்டு பாதிக்கப்பட்ட ரீச்சர்மார் கேக்கினம். அவை கேக்கிறதிலையும் நியாயம் இருக்குத் தானே?

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனிப்பெயர்ச்சிப் பலன்

கும்ப ராசிக்காரர்களுக்கு, வாக்கிய பஞ்சாங்கப்படி 6.3.2026 முதல் ஜென்மச்சனி விலகுகிறது. 24.4.2028 வரையிலும் பாதச்சனியாக அமர்ந்து பலன் தரப் போகிறார். அவர் ஆட்சிபெற்று வலுவாக அமர்வதால், மனதில் சாந்தம் பிறக்கும்; வீண் பயம் அகலும். வற்றிய பணப்பை நிரம்பும். குடும்பத்தில் இனி மகிழ்ச்சி தங்கும்.

பிள்ளைகளின் திருமணம் குறித்த கவலைகள் விலகும். எனினும், உணவுப் பழக்க வழக்கங்களில் அலட்சியம் வேண்டாம். பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரம்மை வந்து நீங்கும். பொதுவெளியில் அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம். எதன் பொருட்டும் எவருக்கும் வாக்குறுதி கொடுக்கவும் வேண்டாம். முக்கியமான பெரிய விஷயங்களைக் கையில் எடுக்கும்போது, வீட்டுப் பெரியவர்களின், அனுபவசாலிகளின் ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

சனிபகவான் பூரட்டாதி சாரத்தில் சஞ்சரிக்கும் காலமான 6.03.2026 முதல் 2.4.2026 வ்ரை, எல்லாவற்றிலும் உங்களுக்கு வெற்றியே. பணம் வரும். விலையுயர்ந்த பொருள்கள் மற்றும் வீடு வாங்குவீர்கள். எதிர்ப்புகள் விலகும்; கவலைகள் தீரும்.

இந்தச் சனிப்பெயர்ச்சிக்காலத்தில் சனிபகவான் மீனத்தில் அமர்ந்து, உங்கள் ராசிக்கு 4, 8 மற்றும் 11ஆம் இடங்களைப் பார்க்கிறார். தாயாரின் உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள். வேலைச்சுமை அதிகரித்துக்கொண்டேயிருக்கும். சில காரியங்களைப் போராடி முடிக்கவேண்டிவரும்.



## கும்பம்

வியாபாரத்தில், அதிரடியான மாற்றங்களைச் செய்வீர்கள். புதிய முதலீடுகளால் வாடிக்கையாளர்களை ஈர்ப்பீர்கள். ஹோட்டல், இரும்பு, ஸ்பெகுலேஷன் வகைகளால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் உங்களைப் புரிந்துகொள்வார்கள். சந்தையின் சூழலை அறிந்து செயற்பட்டால், இரட்டிப்பு இலாபம் உண்டு.

உத்தியோகத்தில், எதிர்பார்த்தபடி முன்னேற்றம் உண்டாகும். சம்பளம் உயரும். புதிய பதவிகளுக்கு உங்களின் பெயர் பரிந்துரைக்கப்பட வாய்ப்பு உண்டு. மேலதிகாரி உங்களைப் புரிந்துகொள்வார். எனினும், அதிகாரிகளைப் பற்றிய விமர்சனங்கள் வேண்டாம்.




## சுமைகளைப் பகிரும் 'சீமோன்'களாவோம்

எமது அன்றாட வாழ்வில் பலரூடாக பலவித உதவிகளைப் பெறுகின்றோம். அவ்வாறே நாமும் செய்கின்றோம். இவ்வுதவிகள் எந்த நேரத்தில் அமைகின்றன? சில உதவிகள் எமக்கு வேண்டியவர்கள், உறவினர் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில உதவிகள் பெயர், புகழ், தலைமைத்துவம் என்பவற்றை நிலைநிறுத்தும் நோக்கில் இடம்பெறுகிறன. பிரதியுபகாரம் பார்த்துச்செய்யும் உதவிகளும் உள்ளன. உதவி செய்வதாகக்கூறி உபத்திரவம் கொடுப்பவர்களும் உண்டு. பொதுநலத்தோடு உதவி செய்யும் உள்ளங்களும் உண்டு. இவற்றுள் நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்? சுமையைக் குறைக்கும் சுமைதாங்கிகளா? கழுத்தை நெரிக்கும் நுகத்தடிகளா? ஏற்றிய ஏணியை எட்டி உதைப்பவர்களா? சிந்திப்போம். வாழ்வின் சுமைகளாலும், போரினாலும், விலைவாசி அதிகரிப்பாலும், அடக்குமுறை, வறுமை நிலைகளாலும் நொந்து வாழ்வோர் அதிகரித்துக் காணப்படுகிறனர். அன்பின்றி, ஆறுதலின்றி, சமாதானமின்றி, ஆதரவின்றி வாழ்வோர் அநேகர் உள்ளனர். எனவே சிலுவைச் சுமையைப் பகிர்ந்த சீமோனைப் போன்று, நல்ல சமாரியன் போன்று, இயேசுவின் முகம் துடைத்த வீரப்பெண் வெரோணிக்கா போன்று பிறர் இன்னல்களைத் துடைக்க முயல்வோம். எம்மை அன்பு செய்வோருக்கு மட்டுமன்றி பகைவருக்கும், முகவரி தெரியாதோருக்கும், பிறவினத்தாருக்கும் பலனை எதிர்பாராது பணிபுரிவோம். இதனையே இயேசுவின் வாழ்வு எமக்கு கற்பிக்கின்றது. மனிதத்தை உயிர்ப்பித்து உறவுகளைப் பலப்படுத்துவோம். தகுந்த சன்மானத்தை இறைவன் எமக்கு அளிப்பார்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## மூலதனத்தை வலுப்படுத்தவும் விரிவாக்கத்தை துரிதப்படுத்தவும் வாலிபல் பைனான்ஸ் 2.12 பில்லியன் ரூபா நிதி திரட்டல்

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான வாலிபல் பைனான்ஸ் பி.எல்.சி. (Vallibel Finance PLC), தனது மூலதன அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கும் எதிர்கால விரிவாக்க நடவடிக்கைகளுக்கும் என சுமார் 2.12 பில்லியன் ரூபாவைத் திரட்டத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

2026 ஜனவரி 9ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, நிறுவனத்தின் 'Tier I' மூலதனத்தை அதிகரிப்பதன்மூலம் அடுத்த கட்ட வளர்ச்சியை எட்டுவதை நோக்கமாகக் கொண்டு இந்த உரிமைப்பங்கு வழங்கல் (Rights Issue) முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், ஒரு சாதாரண வாக்குரிமையுள்ள பங்கினை 72 ரூபா என்ற விலையில், மொத்தம் 29,431,675 புதிய பங்குகளை வெளியிட நிறுவனம் தீர்மானித்துள்ளது. தற்போதைய பங்குதாரர்களுக்கு, அவர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு 8 பங்குகளுக்கும் ஒரு புதிய பங்கு என்ற விகிதத்தில் (1:8) இந்த உரிமைப்பங்கு வழங்கப்படவுள்ளது. இதன்மூலம் தற்போதைய பங்குதாரர்கள் நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்களிப்பதோடு, தமது உரிமையாண்மையையும் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

இலங்கையின் மாறிவரும் நிதிச்சேவைச் சூழலில் உருவாகும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், கடன் வழங்கும் திறனை அதிகரிப்பதற்கும், நிதி ரீதியான ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் இந்த மூலதனத் திரட்டல் மிக அவசியமானது என நிறுவனம் தெரிவித்துள்ளது.

தலைவர் தம்மிக்க பெரேரா மற்றும் மேலாண்மைப் பணிப்பாளர் ஜயந்த ரங்கமுவ ஆகியோரின் வழிகாட்டலில் 2007ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட வாலிபல் பைனான்ஸ், வெறும் 19 ஆண்டுகளில் இலங்கையின் முதல் ஐந்து நிதி நிறுவனங்களுக்குள் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளது. ஆரம்பிக்கப்பட்ட 17 ஆண்டுகளுக்குள் 100 பில்லியன் ரூபா சொத்து மதிப்பைத் தாண்டிய நாட்டின் அதிவேக நிதி நிறுவனமாகத் திகழ்கிறது. இந்த நிறுவனம் 'A' (LRA) கடன் தரத்தையும், 'A' வர்த்தக நாமத் தரத்தையும் (Brand Rating) கொண்டுள்ளது.

'The Global Economics' நிறுவனத்தால் பலமுறை 'சிறந்த நிதி நிறுவனம்' என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. வாலிபல் பைனான்ஸ் தனது வாடிக்கையாளர்களுக்கு நவீன டிஜிற்றல் தளங்கள் ஊடாக ஒருங்கிணைந்த நிதித் தீர்வுகளை வழங்கிவருகின்றது. தற்போது நாடு முழுவதும் 87 கிளைகளையும், 2,200 க்கும் மேற்பட்ட ஊழியர்களையும் கொண்டுள்ள இந்த நிறுவனம், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற வாடிக்கையாளர்களை வெற்றிகரமாகச் சென்றடைந்துள்ளது. புதிய மூலதனத் திரட்டல்மூலம், வாலிபல் பைனான்ஸ் தனது ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தி, இலங்கையின் நிதித்துறையில் புதிய மைல்கற்களை எட்டத் தயாராகிவருகின்றது.

## இதழியல் உலகின் சகாப்தம் மறைவு

சென்னை, மார்ச் 28

இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும், பிரபல பதிப்பாளருமான கே.வி.எஸ். மோகன் தனது 86ஆவது வயதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சென்னையில் காலமானார். 1940 இல் பிறந்த கே.வி.எஸ். மோகன், இலங்கையின் ஆரம்பகாலத் தமிழ் இதழியல் வரலாற்றில் மிக முக்கியமானவர்.

இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பைச் சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துவதற்காக 'கடம்பம்' எனும் சஞ்சிகையைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

சிறந்த எழுத்தாளராக மட்டுமன்றி, இந்தியத் தமிழ் சினிமாவின் நுணுக்கங்களை அறிந்த சிறந்த திரை விமர்சகராகவும் அவர் திகழ்ந்தார். இலக்கியத்துறையோடு நின்றுவிடாமல், லயன்ஸ் மற்றும் ரோட்டரி போன்ற சர்வதேச சமூகசேவை அமைப்புகளில் இணைந்து பல்வேறு மக்கள் நலப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அவரது விமர்சனங்கள் மற்றும் கட்டுரைகள் இலக்கிய மற்றும் திரைத்துறை வட்டாரங்களில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## நீதியின் தராசு சமமாயிருக்கட்டும்!

தமிழ் மக்களின் உரிமைக்காகவும், இனங்களுக்கிடையிலான சகவாழ்வுக்காகவும் ஓங்கி ஒலித்த ஒரு குரல், 2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி கொழும்பு நாரஹன்பிட்டியில் துப்பாக்கிச்சூட்டினால் மௌனிக்கப்பட்டது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நடராஜா ரவிராஜின் அந்தப் படுகொலை, ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்தையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட ஐவரை, 2016ஆம் ஆண்டு நள்ளிரவில் ஜூரி சபையின் முடிவின்படி கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்தபோது, நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டிருந்ததோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்தது. 'போதிய சாட்சியங்கள் இல்லை' எனக்கூறி வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்பு, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழைக்கப்பட்ட ஒரு பெரும் அநீதியாகவே பார்க்கப்பட்டது. ஆனால், காலச்சக்கரம் சுழலும்போது உண்மைகள் ஒருபோதும் உறங்கிவிடுவதில்லை என்பதை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிரடித் தீர்ப்பு நிரூபித்துள்ளது.

சட்டமா அதிபரால் தாக்கல்செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை நீண்டகாலமாக ஆராய்ந்த நீதியரசர்களான சசி மகேந்திரன் மற்றும் அமல் ரணராஜா ஆகியோரடங்கிய அமர்வு, மேல் நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பை இரத்துச்செய்துள்ளது. தர்மத்தின் வாழ்வுதனைச் சூது தற்காலிகமாகக் கவ்வினாலும், இறுதியில் தர்மமே வெல்லும் என்ற நீதிக்கான நம்பிக்கையை இந்தத் தீர்ப்பு மீண்டும் துளிர்விடச் செய்துள்ளது. நள்ளிரவுத் தீர்ப்புகள் மூலம் குற்றவாளிகள் தப்பித்துவிடலாம் என்ற கனவைச் சிதறடித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த வழக்கை மீண்டும் ஆரம்பத்திலிருந்து விசாரணை செய்ய உத்தரவிட்டுள்ளமை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனையாகும்.

ஒரு மக்கள் பிரதிநிதியொருவர் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில், பத்தாண்டுகளுக்குப் பிறகு கிடைத்த ஒரு தீர்ப்பு மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவது, இலங்கையின் நீதித்துறையின் மீதான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்ப உதவும். அதிகார பலமோ அல்லது அரசியல் செல்வாக்கோ நீதியின் கரங்களிலிருந்து யாரையும் நிரந்தரமாகக் காப்பாற்றிவிட முடியாது என்பதற்கு இந்தத் தீர்ப்பு ஒரு சிறந்த உதாரணம். ரவிராஜின் குடும்பத்தினரும், அவரை நேசித்த மக்களும் கடந்த இரு தசாப்தங்களாகக் காத்துக்கொண்டிருந்த நீதி இப்போதும் கானல் நீராகிவிடக்கூடாது.

மறுவிசாரணை என்பது வெறும் சடங்காக இல்லாமல், மறைக்கப்பட்ட உண்மைகளையும், அதன் பின்னாலிருந்த சூத்திரதாரிகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் ஒரு நேர்மையான முயற்சியாக அமையவேண்டும். அநீதி இழைக்கப்பட்டுப் பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும், காலம் கடந் தாவது நீதி வழங்கப்படுவதுதான் நாகரிகமடைந்த ஒரு சமூகத்தின் அடையாளம். ரவிராஜ் கொலை வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள இந்த உத்தரவு உண்மையைத் தவிர வேறொன்றையும் வெல்லாது என்ற வேதவாக்குக்கு வலுச்சேர்த் துள்ளது. இனிவரும் விசாரணைகளாவது அரசியல் தலையீடுகளின்றி, நீதியின் தராசில் எவ்விதச் சரிவுமின்றி அமைய வேண் டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







## பொய்யாமொழி

**விருந்து புவித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்**

**பொருள்:** விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?



### 323 கொள்கலன்கள் விடுவிப்பு

## முதற்கட்ட சோதனையில் முறைகேடுகள் இல்லை!

சுங்கப் பேச்சாளர் தகவல்

**கொழும்பு, மார்ச் 28**
**சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களில் தாம் பரிசோதனை செய்த ஒரு தொகுதியில் எவ்வித சட்டவிரோத நடவடிக்கைகளும் கண்டறியப்படவில்லை எனச் சுங்க ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது- குறித்த கொள்கலன்களை இறக்குமதி செய்த நிறுவனங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட தணிக்கை மற்றும் சோதனைகளின்போது, எவ்வித முறைகேடுகளும் பதிவாகவில்லை. எனினும், இந்தப் பதில் நேரடியாகப் பரிசோதித்த கொள்கலன்களுக்கு மாத்திரமே பொருந்தும். ஏனையவை குறித்த முழுமையான அறிக்கை கிடைத்த பின்னரே இறுதி முடிவை அறிவிக்க முடியும். சர்ச்சைக்குரிய எஞ்சிய கொள்கலன்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதன் அறிக்கைகள் விரைவில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (ச-இ)

## தந்தை தாக்கியதில் மகன் உயிரிழப்பு!




புத்தளம், மார்ச் 28
புத்தளம் சொஹொன் கல்ம பகுதியில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் 26 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்த இளைஞர் தனது தந்தையுடன் வீட்டில் மது அருந்திக் கொண்டிருந்தபோது அவர்களுக்கிடையே ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியுள்ளது. இதன்போது தந்தை தனது மகனைக் கோடாரியால் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 63 வயதுடைய தந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## இனிப்புப் பண்டங்கள் மே வரை விலையுயராது

கொழும்பு, மார்ச் 28
எதிர்வரும் மே மாதம் வரை பிஸ்கட், ஐஸ்கிறீம் மற்றும் சொக்லேட் உள்ளிட்ட இனிப்புப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. வர்த்தக அமைச்சுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மே மாதம் வரை தற்போதுள்ள விலைகளிலேயே இந்த உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இலஞ்சம் பெற்ற பொலிஸ் கைது!

கொழும்பு, மார்ச் 28
அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் 4,000 ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)



## 7 இலட்சத்தை நெருங்கும் சுற்றுலாவிகள் வருகை!

கொழும்பு, மார்ச் 28
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 7 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 692,744 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - பங்குனி 15
29.03.2026
சுபநேரம் : 09.13 - 10.43
ராகுகாலம் : 04.43 - 06.13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வடக்கில் 60 புதிய வழித்தடங்களில் பாடசாலைகளுக்கான பஸ் சேவை

**யாழ்ப்பாணம், மார்ச் 28**

**வடக்கு மாகாணம் முழுவதும் சுமார் 60 புதிய வழித்தடங்களில் சிசு செரிய பேருந்துச் சேவையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவரும் பொறியியலாளருமான சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- 2005ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சிசு செரிய சேவையானது, கல்வி அமைச்சு, பொலிஸ் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச்சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் நடைமுறைப்படுத்தப்படும் நம்பகமான சேவையாகும். மாணவர்களும், ஆசிரியர்களும் எவ்வித இடையூறுகளுமின்றி, பாதுகாப்பாகக் கல்வி நிலையங்களுக்குச் சென்று திரும்பு வதற்காகவே பிரத்தியேகமாக இந்தச் சேவை வழங்கப்படுகின்றது.

தற்போது நாடளாவிய ரீதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளன. எனினும், வடக்கு மாகாணத்தில் இதுவரை இந்தச்சேவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலைமையை மாற்றிச் சேவையை விரிவுபடுத்தும் நோக்கில், வடக்கு மாகாணம் முழுவதும் சுமார் 60 புதிய வழித்தடங்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பரிந்துரைகளுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைவாக யாழ்ப்பாணத்தில் 25 வழித்தடங்களிலும், முல்லைத்தீவில் 12 வழித்தடங்களிலும், கிளிநொச்சியில் 9 வழித்தடங்களிலும், வவுனியாவில் 8 வழித்தடங்களிலும், மன்னாரில் 6 வழித்தடங்களிலும் பேருந்துகள் இயக்கப்படும். இந்தச் சேவை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக மட்டுமே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கும்.

மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணமும், ஆசிரியர்களுக்கு சாதாரண கட்டணமும் அறவிடப்படும். ஆரம்பகட்டமாக குறைந்தது 40 பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான வழித்தடத் தெரிவு மற்றும் அனுமதி வழங்கும் செயன்முறைகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. அத்துடன், சில பகுதிகளில் இந்தச் சேவை ஏற்கனவே சோதனை அடிப்படையில் இயங்கி வருகின்றது. இதன்மூலம் மாணவர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்துச் சிரமங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டு, அவர்களின் பாதுகாப்பான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விப் பயணம் உறுதி செய்யப்படும்-என்றார். (சு-66,113)

## மழலைகளின் விளையாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 28

வரணி இடைக்குறிச்சி சர்வோதய முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

முகாமைத்துவக்குழுத் தலைவர் க.சுதாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் தி.அபராஜிதன், சிறப்பு விருந்தினர்களாக பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் க.அருட்செல்வம், இடைக்குறிச்சி கிராம அலுவலர் சோ.கீர்த்திகா, கௌரவ விருந்தினர்களாக வரணி குடும்ப முன்பள்ளிகளின் தலைவி திருமதி லோ.கேதிகா, சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் பா.ஞானநிறோசன் ஆகியோர் கலந்துகொள்வர். (சு-159)

## கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகின. இன்றும் போட்டிகள் நடைபெறும்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கான சான்றிதழ்களும், பதக்கங்களும் உடனுக்குடன் வழங்கிக் கௌரவிக்கப்படும் என்று கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஜிவிந்தன் தெரிவித்துள்ளார். (சு-422)

## 85ஆவது குருதிக்கொடையும் கொடையாளர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம், வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் 85ஆவது குருதிக்கொடை முகாமும், கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரை, வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் ஊடாக 50 தடவைகளுக்கு மேல் குருதிக்கொடை வழங்கிய நால்வர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நால்வரும் வல்வெட்டித்துறை வேம்படியிலிருந்து, நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபம் வரை நடைபவனியாக அழைத்து வரப்பட்டு, மண்டபத்தில் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (சு-66)

## வீதிகளின் கழிவுகளை பிரதேசசபை அகற்றும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வீதியில் உள்ள குப்பைகளை அகற்றவோ, வேறு செயற்பாடுகளைச் செய்யவோ மக்களுக்கு உரிமை இல்லை. பிரதேசசபையே அவற்றை முன்னெடுக்க வேண்டும் என்று மானிப்பாய் பிரதேசசபையின் தவிசாளர் க.யசீதன் தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேசசபை அமர்வில் உறுப்பினர் பகீரதன், 15 நாள்களுக்கு முன்னர் எமது வட்டாரத்தில் இடம்பெற்ற மரணச்சடங்கின்போது வீதியில் வெடி கொளுத்துவதற்காக, சபைக்குக் கட்டணமாக 10 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டது. அந்த 10 ஆயிரம் ரூபா வெடி கொளுத்தும் குறித்த பகுதியைச் சுத்தம் செய்வதற்காகவே அறவிடப்படுகின்றது. ஆனால் குறித்த மரணச்சடங்கு இடம்பெற்று 15 நாள்கள் கடந்த நிலையிலும், இதுவரை அந்த இடம் சுத்தம் செய்யப்படவில்லை. குறித்த பகுதியை தாங்களே சுத்தம் செய்வதாக மக்கள் கூறினால், அந்தக் கட்டணத்தைச் செலுத்தாமல் விடலாமே? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், நான் இந்தியாவில் இருந்தமையால் குறித்த விடயம் தொடர்பாக எனக்குத் தெரியவில்லை. குறித்த பகுதியை விரைவில் சுத்தம் செய்வோம்-என்றார். (சு-27)

## மன்னாரில் பெரிய வெங்காயத்தின் உண்மை விதை அறுவடை ஆரம்பம்

மன்னார், மார்ச் 28

இரணை இலுப்பைக்குளம் கிராம விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட, பெரிய வெங்காயத்தின் உண்மை விதை உற்பத்தியின் அறுவடை, மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி ர.பிரியதர்சினி தலைமையில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்பின் ஊடாக 10.5 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில், பெரிய வெங்காயத்தின் உண்மை விதை உற்பத்தி மற்றும் விவசாயக் கிணறுகள் புனரமைப்புச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு, தலா 1 இலட்சத்து 93 ஆயிரம் ரூபா பெறுமதியான உண்மை விதை உற்பத்திக்கான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டதுடன், 30 விவசாயக் கிணறுகளும் புனரமைப்புச் செய்து கையளிக்கப்பட்டன. 3 மாதங்களைக் கொண்ட பெரிய வெங்காயத்தின் உண்மை விதை உற்பத்தித் திட்டத்தின் கீழ், தலா 6 சதுர மீற்றர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த உற்பத்தியின் மூலம் கிடைக்கும் விதைகளைக் கொண்டு, எதிர்காலத்தில் சுமார் 30 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காய உற்பத்தியை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்டச் செயலர், மடுப் பிரதேச செயலர், மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், விவசாயப் போதனாசிரியர்கள், கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


## யோக சுவாமிகளின் குருபூசை வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 28
சிவயோக சுவாமிகளின் 62ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு, கொழும்புத்துறையில் அமைந்துள்ள சமாதிக் கோவிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சிறப்பு அபிஷேகம், பூசை வழி பாடுகள் இடம்பெறும். தொடர்ந்து சுவாமிகளின் நற்சிந்தனையும் ஓதப்படும். (க-17,66)



## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**கனகரத்தினம் சுரேஸ்குமார் (சுரேஸ்)**
(பணியாளர், புதுக்குடியிருப்பு ஆதாரவைத்தியசாலை)
பிறப்பு 16.08.1976 இறப்பு 28.03.2009

கண் கண்ட தெய்வமே
நிழலாக இருந்த உங்களை
நிஜமாக பிரிந்து 17 ஆண்டு ஆனதுவோ
இமை மூடும் பொழுதெல்லாம் எம் மனதில்
கலந்திருப்பீர்

**கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)**
பிறப்பு 17.05.1984 இறப்பு 13.03.2009

அன்பின் உறவே
பகைவனின் அசுர...
17 வருடங்கள் ஆறாத வடுவாய்
எம் மனதில்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆனாலும் உங்கள் நினைவுகளிலே வாழும்

அன்பு மனைவி சு. பரிமளம் (மதி) அப்பா, அம்மா, சகோதரங்கள்
தாவளை - இயற்றாளை, வரணி.

(CK/47284) J-1

## நினைவஞ்சலி

14ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டு





அமரர்
**கந்தையா பாலசிங்கம்**
(முன்னாள் புகையிரத நிலைய அதிபர்)
அன்னையின் மடியில் சரண் 16.10.1925
ஆண்டவன் பாதங்களில் சரண் 09.04.2012

அமரர்
**சரஸ்வதி பாலசிங்கம்**
அன்னையின் மடியில் சரண் 11.05.1930
ஆண்டவன் பாதங்களில் சரண் 28.03.2025

அன்னையாய் தந்தையாய் ஆன எமதருமைப் பெற்றோரே ! அறுபத்தொரு வருட திருமண நல்வாழ்வில் ஆறு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று நன்னெறியில் வளர்த்து மேலான கல்விச் செல்வத்தை உயர்தரக் கல்லூரிகளில் வழங்கி கல்வித்துறை, உயர்கல்வித்துறை, நீதித்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றில் பணிபுரிய வைத்து அத்துடன் வெளிநாட்டு நிறுவனத்தில் சேவைக்கால பாராட்டும் பெற நீங்கள் எமக்கு அளித்த கல்விச் செல்வமே அருளாகும்.
எல்லோர்க்கும் அங்கீகாரம் பெற்றுத்தந்த உங்கள் சேவையை என்றும் மறவோம்.
எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்களது ஆன்மா எம்மை சிறப்புற வாழ வைக்கும்.
குல தெய்வங்களின் பாதகமலங்களில் சாந்தி பெறுக.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"துவாரகா"
கதிர்காம சுவாமி கோவிலடி,
காரைநகர்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(CS/31556)J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 15.05.1938 இறப்பு 24.03.2026

### பரமேஸ்வரி துரைராஜா (தங்கமணி)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி துரைராஜா அவர்கள் கடந்த (24.03.2026) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, மற்றும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற தெய்வானை (செல்லம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஞானேஸ்வரி (ஞானம் - பிரான்ஸ்) மற்றும் குணசேகரன் (பிரான்ஸ்), சரோஜாதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற ஸ்ரீரூபன் (ரூபன் - பிரான்ஸ்), ஆனந்தன் (ரூபன் - சுவிஸ்), விஜயராணி (இலங்கை), தவசீலன் (தவம் - பிரான்ஸ்), சுகந்தினி (இலங்கை), மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தரலிங்கம் (தேவன் - பிரான்ஸ்), ஸ்ரீரஞ்சினி (பிரான்ஸ்), மனோராசா (சுவிஸ்), பவளம் (பிரான்ஸ்), சிவகுமாரி (சுவிஸ்), வாமதேவன் (இலங்கை), கார்த்திகா (பிரான்ஸ்), சசிகுமார் (இலங்கை), காந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகம்மா, சின்னத்துரை, மகேஸ்வரி (கண்மணி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜனகன், பூர்ணிமா, குயிலினி, சுஜித்தா, ஸ்ரீரதி, ஸ்ரீபவானி, மதுரன், யாதவன், சுபாங்கி, பிரணவன், பிரூஜன், சுவேதா, ஆர்த்திகா, சேயோன், சானுஜா, சாகித்யா, ராகவி, காசினி, எழில்ராஜ், கபாலினி, ரதிக்கா, தனுஸ்கா, ஹரிசுதன், அரிகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மெலினா, ஜதன், இணையா, அஸ்லீன், அரோன், ஆழியா, கொம், எல்லா, சஜன், ராணியா ஆகியோரின் ஆருயிர் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

7, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/61071) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச முதலீட்டில் யாழ்.சிற்றி ஹோட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த 'ரில்கோ சிற்றி' ஹோட்டலை வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் முழுமையாகக் கொள்வனவு செய்துள்ளார். இனிவரும் காலங்களில் இது 'யாழ். சிற்றி ஹோட்டல்' என்ற பெயரில் புதிய பரிமாணத்துடன் இயங்கும் என அதன் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல்களில் உள்ளூர் பாரம்பரிய உணவுகள் முறையாகக் கிடைப்பதில்லை என்ற நுகர்வோரின் நீண்டகாலக் குறையைத் தீர்க்கப் புதிய நிர்வாகம் முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் தனித்துவமான உணவுப் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் விசேட உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படவுள்ளன.

விருந்தோம்பல் சேவைகள் அனைத்தும் யாழ். மண்ணின் கலை, கலாசாரம் மற்றும் பாரம் பரிய விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமையும்.

தென்னிலங்கையின் முன்னணி ஹோட்டல் துறை வல்லுநர்களின் ஒத்துழைப்புடன், யாழ்ப்பாணத்தின் ஹோட்டல் துறையை சர்வதேசத் தரத்துக்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை வட பகுதியை நோக்கி ஈர்ப்பதற்காகப் பல்வேறு புதிய உத்திகள் கையாளப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அடையாளங்களைச் சிதைக்காமல், நவீன வசதிகளுடன் கூடிய தரமான சேவையை வழங்குவதே தமது நோக்கம் என்றும் நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 11 . 1948

மறைவு 27 . 03 . 2026

### சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

(முன்னாள் சர்வோதய அமைப்பாளர், யாழ் மாவட்டம்)

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியினை பிறப்பிடமாகவும், இல.167, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (27.03.2026) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராணியம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - கமலாச்சி தம்பதியரின் மருமகனும், மல்லிகாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், பானுரேகா (மருந்தாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு தந்தையும், தேவரூபன் (அரச நில அளவையாளர் பிரதேச நில அளவைக் காரியாலயம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், கர்ணிகா அவர்களின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
இல. 167, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
077 203 2639

(CS/61085) J-1

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

எமது சபையின் தலைமை அலுவலக வளாகத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்காக தறிக்கப்பட்ட மரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காலம் : 06.04.2026 திங்கட்க்கிழமை காலை 10.00 மணி

இடம் : தலைமை அலுவலகம் வலி தெற்கு பிரதேசசபை சுன்னாகம்

நிபந்தனைகள்

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 500.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும் மு.ப. 10.00 பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படாது.
2. சித்தியடைந்த ஏலத்தார் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
3. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 0212240017

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்.
28.03.2026

## வவுனியா மாவட்ட கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

பதிவு இல: V/465

## பால் பதனிடும் தொழிற்சாலை வாடகை அடிப்படையில் வழங்குதல்

எமது சங்கத்திற்கு சொந்தமான வவுனியா மரக்காரம்பளையில் அமைந்துள்ள பால் பதனிடும் தொழிற்சாலையை ஐந்து வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

✣ கீழ்வரும் நிபந்தனைகள் அடிப்படையின் கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. குத்தகை முற்பணமாக ஆகக்குறைந்த தொகையாக ரூபா நாற்பது இலட்சம் (ரூபா 04 மில்லியன்) எதிர்பார்க்கப்படுகின்றது.
02. மாத வாடகையாக ஆகக்குறைந்தது ரூபா ஒரு இலட்சம் (ரூபா 100,000) எதிர்பார்க்கப்படுகின்றது.
03. ஒவ்வொரு ஆண்டின் முடிவின் பின்னும் ஆரம்ப வாடகை தொகையுடன் 10% வாடகை தொகை அதிகரித்து வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்பால் தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 16.04.2026ஆம் திகதி மதியம் 12.00மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்க கூடியதாக கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேற்படி விடயம் தொடர்பில் வவுனியா கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் இயக்குனர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும்.

குறிப்பு - 01 - இத்தொழிற்சாலை உடன் செயற்படுத்தக்கூடிய நிலையில் காணப்படவில்லை. இந்நிலையில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் திறத்தவரே பால் பதனிடும் தொழிற்சாலையை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு ஏதுவான விடயங்களைக் கையாள வேண்டும் என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

குறிப்பு - 02 - குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் தலைவர் அல்லது செயலாளருடன் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்**
**வவுனியா**
**மே.பா**
**அமுத சுரபி கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவு சங்கம்,**
**முருகனூர்.**
**வவுனியா.**
**தொ.இல :- 0770314351, 0776143499**

(CS/61082) J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 10 . 1934

இறப்பு 24 . 03 . 2026

### வள்ளிப்பிள்ளை நல்லதம்பி

யாழ். மீசாலை கிழக்கு அல்லாரையைப் பிறப்பிடமாகவும், வெளிக்கண்டல் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிப்பிள்ளை நல்லதம்பி அவர்கள் கடந்த (24-03-2026) செவ்வாய்க்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நிற்சிங்கர் - பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - உமையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நமசிவாயம் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனியும், இராஜேஸ்வரி, பராசக்தி, சிவராஜா (லண்டன்), ஜெயலெட்சுமி (சுவிஸ்), திருநாவுக்கரசு (லண்டன்), தயாபரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தில்லைராஜா, மங்கையர்க்கரசி (லண்டன்), இளங்கோ (சுவிஸ்), மேகலா (லண்டன்), வனிதா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், ஹேமா (சுவிஸ்), ரமேஷ் (லண்டன்), மனோஜன் (லண்டன்), வானதி (சுவிஸ்), ஆதவன் (சுவிஸ்), யக்சனா (லண்டன்), மதுஜனா (லண்டன்), ஹர்சா (நோர்வே), ஹரிணி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நவீனா, ஜீவனா, மயூரன், ரூபன், கார்த்திக், எழிலோவியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29-03-2026) ஞாயிற்றுக்கிழமை தயாகிரி, மதவடி ஒழுங்கை, அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மீசாலை கிழக்கு, மீசாலை
076 639 7725, 077 802 7130

(CS/61078) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உள்ளூராட்சி அதிகாரங்களை முடக்க பிரஜாசக்தியூடாக அரசியல் தலையீடு

வடமராட்சி வடக்கு அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'பிரஜாசக்தி' திட்டத்தின் ஊடாக, மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன என்று வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் மற்றும் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெ.ரஜீவன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், சபையின் அனுமதியின்றி 'பிரஜாசக்திக்' குழுவின் பரிந்துரையின் பேரில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்படுவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையைப் புறக்கணித்து, அதன் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறான பணிகளை முன்னெடுப்பதை ஒருபோதும் ஏற்கமுடியாது எனப் பருத்தித்துறை பிரதேசசபைத் தவிசாளர் உ.யுகதீஸ் மற்றும் பருத்தித்துறை நகர பிதா வி.டக்ளஸ் போல் ஆகியோர் தெரிவித்தனர். ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் ஜெ.ரஜீவன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோர் பிரஜாசக்தித் திட்டத்துக்கு ஆதரவாகப் பேசியதால் கூட்டத்தில் நீண்டநேரம் வாதப்பிரதிவாதங்கள் நீடித்தன. (ச-100)

சேவை நலன் பாராட்டு



யாழ். போதனா வைத்தியசாலையில் 37 வருடங்களாக விடுதி பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

திரு.சுப்பிரமணியம் ஜெயராஜன்
(Ward Master)

அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

யாழ். போதனா மருத்துவமனையில்

# மூளைச் சாவடைந்த நபரின் இரு சிறுநீரகங்களும் தானம்

இருவருக்கு வாழ்வளித்த சிங்களவர்



யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மூளைச்சாவடைந்த சிங்களவர் ஒருவரின் இரண்டு சிறுநீரகங்களும் தானமாக வழங்கப்பட்ட நிலையில், அவர்மூலம் இருவருக்குப் புது வாழ்வு கிடைத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

போகஸ்வெளா பகுதியைச் சேர்ந்த ஆர்.முத்துபண்டா என்பவர் மூளைக்கட்டி காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை மூளைச் சாவடைந்துள்ளார். அவரது குடும்பத்தினர் அவரது இரு சிறுநீரகங்களையும் தானமாக வழங்க ஒப்புக்கொண்டனர்.

இதற்கமைய, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் இரு சிறுநீரகங்களும் பிரித்தெடுக்கப்பட்டு காத்திருப்புப் பட்டியலிலிருந்த ஒருவருக்கு ஒரு சிறுநீரகம் உடனடியாக வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது. மற்றொரு சிறுநீரகம் நாட்டிலுள்ள மற்றொரு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு சிறுநீரகம் அவசியம் தேவைப்படும் நபருக்குப் பொருத்தப்பட்டுள்ளது. (ம-66)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகைக்கடை ஒன்றிற்கு விற்பனையாளர், வரவேற்பாளர் ஆண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு:- 078 899 9147

(CS/47292) J-1

## யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம் பொதுக்கூட்ட அறிவித்தல்

யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் 2026ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 11.04.2026 சனிக்கிழமை அன்று இல.09, நந்தாவில் வீதி, தாவடியில் அமைந்துள்ள JDCA அலுவலகத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெற உள்ளது. அக் கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்
(JDCA)

(31077) A

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:


| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/C1/2026/01 | Construction of Entrance Gate at Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna | 4.63 | 60 | C8 or above (Building) | Rs. 50,000.00 31.07.2026 | Rs. 2,500.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 30 th March 2026 until 16 th April 2026 from 9:00 hrs to 16:00 hrs and** upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No **"97000006000276"** should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Senior Assistant Registrar, Capital Works Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works Planning Branch, to reach on or before 10.00 hrs on the 17 th April, 2026.** Bids will be opened soon after closing, at **10.00 hrs on the 17 th April, 2026** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **77 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at **10.00 hrs on the 9 th April, 2026.**

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna**
**28.03.2026**

(CR/47294) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜீவ ஊற்று அன்பின் கரம் அலுவலகம் திறந்துவைப்பு

மன்னார், மார்ச் 28
மன்னார் பனங்கட்டுக்கொட்டுப் பகுதியில் ஜீவ ஊற்று அன்பின் கரம் அலுவலகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் டில்சான் பயஸ், ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோன் தயாழினி, குறித்த அமைப்பின் செயலாளர் பெஞ்சமின் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்துவைத்தனர்.

தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட 25 பெண்களுக்கு மூன்று மாத கால தையல் பயிற்சிகளை வழங்குவதற்காக ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிகழ்வில் ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் மன்னார், கிளிநொச்சி மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (எ-41-56)


## நாடக விழா


யாழ்ப்பாணம், மார்ச் 28
உலக நாடக தினத்தை முன்னிட்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றம் செம்முகம் ஆற்றுகைக்குழுவுடன் இணைந்து நடத்திய நாடக விழா-2026 நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக்குழுவின் நிறுவுநர் கறுப்பையா சீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதன்போது 'அவளின் பயணம்' எனும் தொனிப்பொருளில் ஓரங்க நாடகமும், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கூடி விளையாடு பாப்பா எனும் சிறுவர் அரங்க ஆற்றுகையும் நடைபெற்றன. (எ-41- 66)



புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் அதிபர் ம.தரணீதரன் தலைமையில் இடம்பெற்றது. (ச)

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின், திருமஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு, நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (க-66)







மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமான் ஆலயப் பெருந்திருவிழாவின் ஐந்தாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய தண்டிகையில், விநாயகப் பெருமான் வீதி உலா வந்தார். (க-66)

நயினாதீவுப் பிரதேச மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு, புதிய காற்றுச் சீரமைப்பி, நயினாதீவைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் பாலசிங்கம் சந்தானலெட்சுமி தம்பதியால், மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. (க- 66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை இலக்கு வைத்து வடக்கு, கிழக்கில் வன்முறை

## வாசுகி கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக பெண்களை இலக்குவைத்து வன்முறைகள் தொடர்கின்றன. இவற்றைத் தடுக்காவிடில் சமூகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை உருவாகும் என்று ஈழத்தமிழர் மகளிர் சிறுவர்களுக்கான மேம்பாட்டு அமைப்பின் வடக்கு - கிழக்குக்கான பணிப்பாளர் வாசுகி சுதாகரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
பெண்களுக்கெதிரான வன்முறைகள் தற்போது உச்சம் பெற்றுள்ளன. குறிப்பாக கிழக்கில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம், பெண்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு போதைப்பொருள் பாவனையே முக்கியமான காரணமாகும். எமது பகுதிக்குள் போதைப்பொருளைத் திணித்து. இளைஞர்களை படுகுழிக்குள் வீழ்த்தும் சக்தியை இல்லாதொழிக்க வேண்டும். பாடசாலை மாணவர்களை நோக்கி ஏவப்படும் போதைப்பொருள் அவர்கஎது வாழ்வை இருள்மயமாக்கி விடும். எனவே பெற்றோர் தமது பிள்ளைகள் மீது அக்கறை கொள்ளவேண்டும். அவர்கள் மீதான கவனிப்பு ஒவ்வொரு செயற்பாடுகளிலும் இருக்கவேண்டும். குறிப்பாக பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைவரும் ஒன்றுதிரள வேண்டும்-என்றார். (க-20)

---

### காணிகளை...

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரை காணி விடுவிப்பு பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் என்ற வகையில் நாம் சில வாக்குறுதிகளை வழங்கியுள்ளோம். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன.
தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. அந்தக் காணிகளை விடுவிக்கும் திட்டத்தில் 80 வீதமான நடவடிக்கைகளை நாங்கள் நிறைவு செய்துள்ளோம். காணிகளை அளந்து, முறைப்படி அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகள் மிக விரைவில் இடம்பெறும்.
இந்த விடயத்தைக் கையாள்வதற்காக புத்தசாசன அமைச்சர் சுனில் செனவி தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நான், நீதியமைச்சர் ஹர்ஷன, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், தெல்லிப்பழை பிரதேசசெயலர், சம்பந்தப்பட்ட விகாரையின் விகாராதிபதி ஆகியோர் உள்ளோம். அனைவரும் சுமுகமான தீர்வை நோக்கி முன்னேறி வருகின்றோம். மிக விரைவில் அதைச் செய்வோம் - என்றார். (அ-ம-26)

### அகழ்வுத்...

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியளவில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான ஏதுநிலைகள் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் உள்ளிட்ட குழுவினர் நேற்று ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர்.
இதன்போதே, செம்மணி மனிதப் புதைகுழியில் அடுத்தகட்ட அகழ்வுப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பான திகதிகள் தொடர்பில், ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என்ற கட்டளையை நீதவான் பிறப்பித்தார். அகழ்வுப் பணிக்கான திகதியைத் தீர்மானிப்பதற்காக ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வழக்கு அழைக்கப்படும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்றையதினம் அரச விடுமுறை என்பதால், அந்தத் திகதியில் மாற்றம் செய்யப்பட்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதிக்கு வழக்கு அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### இராணுவ...

வதற்கு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, வயாவிளான் பகுதியில் மக்களின் தனியார் காணிக்குள் அனுமதி இல்லாமல் அடாத்தான முறையில் இராணுவ மருத்துவமனை அமைக்கும் விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களைத் தொடர்ந்து, வயாவிளான் இராணுவ மருத்துவமனைக் கட்டுமானங்களை உடனடியாக நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-26)

### பலாலி...

தெரிவித்ததாவது:-
பொதுமக்களின் காணிகளை மக்களிடம் வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் கணிசமான காணிகளை விடுவிக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக பலாலி கிழக்குப் பகுதி முழுவதையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-26)

### தென்.பிரதேச...

டது. நிர்வாக வசதியைக் கருத்திற்கொண்டு தென்மராட்சி பிரதேசசெயலகத்தை இரண்டு பிரிவுகளாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் அவதானம் செலுத்தப்பட்ட நிலையிலேயே, தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டு பிரிவுகளாக மாற்றுவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### யாழ்...

களின் இடமாற்றம் தொடர்பிலும், காணி விடுவிப்புத் தொடர்பிலும் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக போராட்டங்கள் இடம்பெறவுள்ளன என கிடைத்த தகவல்களுக்கு அமையவே, மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. (அ-ம-26)

### வீதியில்...

முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த சபாரத்தினம் கெங்காதரன் (வயது-56) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அந்த நபர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### 10 இந்திய...

மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த மாதம் 19ஆம் திகதி இந்திய மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிரான வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. சந்தேகநபர்கள் அனைவரும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். இதையடுத்தே, அவர்களுக்கு 12 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
அத்துடன் அனைத்து மீனவர்களுக்கும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும், வழக்கின் சான்றுப் பொருள்களை அரசுடைமையாக்கும் உத்தரவும் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. (அ-ம-56-60)

### எரிபொருள்...

எது. மத்திய கிழக்குப் போரால் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிகள் தொடர்பில், ஜனாதிபதி அநுர இந்தியப் பிரதமர் மோடியுடன் அண்மையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இந்தக் கலந்துரையாடலில் கருத்திற் கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையிலேயே, இந்தியாவில் இருந்து எரிபொருளுடன் கப்பலொன்று இன்று இலங்கைக்கு வரவுள்ளது. இலங்கையின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியா வழங்கி வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் மற்றுமொரு அம்சமாக இந்த எரிபொருள் வழங்கல் அமைந்துள்ளதாக இந்தியத் தூதரகம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

### கத்தி...

இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.
இரண்டு நபர்களுக்கிடையே இடம்பெற்ற கருத்துமோதலே கத்திவெட்டுத் தாக்குதலாக மாறியுள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலை நடத்தியவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில், மேலதிக விசாரணைகளைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-27)

### 51 கிலோ...

டன. அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். கப்ரக வாகனத்தில் கஞ்சா கடத்தப்படுவதாக விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே மேற்படி கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் சான்றுப் பொருள்களுடன் ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

### மஞ்சள்...

வயலில் அண்மையில் மஞ்சள் பயிரிடப்பட்டது. பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த மஞ்சள் செய்கை வெற்றியளித்த நிலையில், அறுவடை நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.
கண்டாவளை விவசாய போதனாசிரியர் க.தனுசீலன் தலைமையில், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் வீ.சோதிலட்சுமியின் பங்கேற்புடன் இந்த அறுவடை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு தொடர் கொலை;

# மயக்க மருந்துகளுடன் ஓட்டோ ஓட்டுநர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பில் பெண்களைக் கடத்தி, நகைகளைக் கொள்ளையிட்டு கிணற்றில் வீசி கொலை செய்து வந்த கும்பலுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபரான 37 வயதுடைய ஓட்டோ ஓட்டுநர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

கிழக்கு மாகாணக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெய்வநாயகம் மேனன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில், கொடூரக் குற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மயக்க மருந்துகள் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்தும், ஏற்கனவே கைதானவர்களின் காஞ்சிரம்குடா வீட்டிலிருந்தும் இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் 6 போத்தல் மயக்க மருந்துகள் நிலத்தில் 2 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அத்துடன் ஓட்டோ ஓட்டுநரின் வீட்டின் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மயக்க ஸ்ப்ரே போத்தல், குற்றச்செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மயக்க மாத்திரைகள் மற்றும் ஏனைய மருந்துப்பொருள்கள், குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோ ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. வெளிமாவட்டம் ஒன்றிலிருந்து பல ஆயிரம் ரூபா பணம் கொடுத்து இந்த மயக்க மருந்துகளைக் கும்பல் பெற்றுள்ளதாகவும், அவற்றை ஓட்டோ ஓட்டுநர் மூலம் விநியோகித்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. அதேவேளை கடந்த 20ஆம் திகதி கொக்கட்டிச்சோலைப் பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து இளம் தாய் ஒருவர் உயிருடனும், மற்றொரு பெண் சடலமாகவும் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவே இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மற்றும் கொள்ளையிடப்பட்ட நகைகளை வாங்கிய இரு நகைக்கடை உரிமையாளர்கள் என 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

யாழில் இருந்து கொழும்பு சென்ற

## பேருந்தில் பற்றியது தீ பயணிகள் அருந்தப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்ற இ.போ.ச. பேருந்தொன்று, நேற்று மாலை திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

வவுனியா தாண்டிக்குளத்துக்கு அண்மித்ததாக பேருந்து சென்று கொண்டிருந்தபோதே இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக இறக்கப்பட்டு, தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ம-110)

# கணுக்கேணிக்குளத்தின் வாய்க்கால் சீரமைப்பு!

ரவிகரன் எம்.பி. நிதியொதுக்கீடு

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள கணுக்கேணிக் குளத்தின் முதலாவது வாய்க்காலைச் சீரமைப்பதற்காக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனது 2026ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 3இ லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

முள்ளியவளை கமநலசேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணிக்குளத்தின் முதலாம் வாய்க்கால் நீண்டகாலமாகச் சீரின்றிக் காணப் படுகின்றது. அதனால் அந்த வாய்க்காலின் கீழ் சுமார் 51 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளும் 28 விவசாயிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த பகுதிக்கு அண்மையில் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, தனது இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 3.5 இலட்சம் ரூபாவினை இந்த வாய்க்கால் சீரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்தார். (ச-246)

# நிஷாந்த விக்கிரமசிங்க பிணையில் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 28

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்கவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரை தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், சந்தேகநபரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கும் தடைவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 28ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது. (ச-இ)

வரலாறு, புவியியல் குழு வகுப்புக்கள் (06 - O/L, A/L)
மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப
தனியாகவோ, குழுவாகவோ
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும்
உங்கள் ஆசான்.
(10 வருடக் கற்பித்தல் அனுபவம்)
T.P : 077 482 5438

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் 43 1/2
பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- 1 1/2 பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப் பட்ட நிலையில்.
- சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- சுன்னாகம் பஸ்நிலையத்திலிருந்து 1km தூரம்.
- புன்காலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2km தூரம்.
- செம்மண் தரை, நண்ணீரூற்று, குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- பார்வையிடும் நேரம் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை
தொடர்பு:- 074 029 2338
076 990 3039
(CS 31518) A




செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media